THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, the 29th April 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Cultivable waste lands

* 677 *Q.*—SRI V. K. KRISHNAMURTHY (on behalf of SRI S. LAZAR and SRI T. SAMPATH): Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the cultivable waste lands remaining uncultivated in the State; and

(*b*) whether there is a proposal to constitute 'agricultural farms' at the initiative of the Government to bring them under cultivation immediately?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) 1,979,120 acres.

(*b*) No, Sir.

SRI S. M. ANNAMALAI: *சார், இங்கு இருக்கும் 1,979,120 ஏக்கர் தரிசு நிலங்களில் சாதாரணமாக விவசாயப் பண்ணைகள் ஏன் ஆரம்பிக்கக்கூடாது? அப்படி ஆரம்பிக்கக்கூடிய மக்களுக்கு சர்க்கார் நிலம் கொடுக்காததேன்? அப்படி பண்ணை ஆரம்பிக்கக் கூடியவர்களுக்கு நிலம் கொடுக்க சர்க்கார் பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *இப்பொழுது கொடுத்த கணக்கின் பிரகாரம் விவசாய பண்ணைக்கு நிலத்தை உடனடியாக எடுத்துக்கொள்ள முடியாது. தகுந்தபடியாக திட்டம் செய்ய வேண்டுமென்றால் எவ்வளவு தூரம் விவசாயத்திற்கு வரக் கூடியதாயிருக்கிறது என்று பார்க்கவேண்டும். நிலம் இல்லாதவர்களுக்கு அசைன் செய்தால் அவர்கள் உடனடியாக கவனம் செலுத்திவிடமுடியாது. எல்லாவற்றையும் விவசாயப் பண்ணையாகச் செய்வது சாத்தியம் அல்ல. என்றாலும் நிலம் ஒரு பரப்பாக இருந்தால் பண்ணையாக வைக்கலாம் என்ற யோசனை இருக்கிறது. சேலம் ஜில்லாவிலே, ஆத்தூர் தாலுக்காவில் 30 ஆயிரம் ஏக்கர் வரை 6 ஆயிரம் பேருக்குக் கொடுத்தோம். இருக்கும் 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தை மேகனேஸ்ட் பார்மாகச் செய்யலாமா என்ற யோசனை இருக்கிறது.*

SRI K. B. S. MANI: *இந்த தரிசு நிலங்களை ஜில்லாவாரியாக தனித்தனியாகப் பிரித்துக்கொடுக்க ஜில்லா கலெக்டர் பொறுப்பில் விடுவார்களா? ஒவ்வொரு ஜில்லாவில் இருக்கிற என். ஸி. ஸி., ஏ. ஸி.ஸி. சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ் ஆகியவர்களை இதை திருத்த உபயோகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

[29th April 1960

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஜில்லாவாரியாக இருக்கிற நிலம் அப்படியே இருக்கிறது. கலெக்டரிடம்தான் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதில் திட்டம் செய்யவேண்டியதில்லை. இதில் ராணுவத்தினரைக் கொண்டு திருத்துவது என்பது சாத்தியம் அல்ல.

SRI V. K. KOTHANDARAMAN: விவசாயப் பண்ணையாக மாற்றவில்லை என்றால் ஐந்து வருஷமாக சில தரிசு நிலங்களில் யார் யார் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்களோ அவர்கள் பேரில் பட்டா செய்ய உத்திரவு போடுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஐந்து வருஷ காலம் சாகுபடி செய்தால் கொடுத்துவிட முடியாது.

SRI S. NAGARAJA MONIGAR: Sir, was not this question already answered in this House? Some 25 days back or so, I myself remember to have put a question like this.

MR. SPEAKER: I do not know. I will find out.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I may tell the hon. Member that this question has been put in a slightly different form.

SRI A. VEDARATHNAM: நம்முடைய மாகாணத்திலே உணவுப் பஞ்சம் அதிகமாக இருக்கிற காரணத்தினால் சாகுபடிக்கு லாயக்கான புறம்போக்கு நிலங்களை வகுத்துக் கொடுப்பதற்கு ஏதாவது குறிப்பிட்ட திட்டம் இருக்கிறதா? இந்தத் திட்டத்தை வகுத்து அனைத்தையும் சாகுபடிக்குக் கொண்டுவர அரசாங்கம் உத்திரவு போடுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: திட்டம் போடுவதில் பயன் இல்லை. தண்ணீர் இல்லாத காரணத்தினால் சாகுபடிக்கு இலாயக்கற்றதாக இருக்கிறது. சாதாரணமாக உத்திரவின் மூலம் இதைத் திருத்திவிட முடியாது.

SRI A. GOVINDASAMY: பயிரிடக்கூடிய தகுதியுள்ள புறம் போக்கு நிலங்களை உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து, அப்பேர்ப்பட்ட நிலங்களுக்கு தண்டத் தீர்வு வசூலிக்காமல் நில ஆர்ஜிதம் செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பயிரிடுவதற்கு ஆட்சேபணையில்லை. அசைன் செய்யப்பட்ட நிலத்தை மீண்டும் எடுத்துக் கொள்ளக்கூடாது.

Conversion of Primary Schools into Basic Schools

* 860 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959-ல் எத்தனை ஆரம்பப் பள்ளிகள் ஆதாரப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன?

(ஆ) அவை எந்தப் பயிற்சி பள்ளியின் காம்ப்பாக்ட் ஏரியாவை சேர்ந்தவை?